செ.வெ.எண்:10 நாள்:05.04.2021

## கரூர் மாவட்டம்

**கரூர் மற்றும் அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதிகளில் வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட உள்ள பொருட்கள் மற்றும் வாக்குச்சாவடிகள் தயாராக உள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

அதன் விபரம் வருமாறு:

நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத்தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர் மற்றும் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்த தேவையான பொருட்கள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக தயார் நிலையில் பிரித்து வைக்கப்பட்டுள்ளதையும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகள் அமைந்துள்ள பகுதிகளையும் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு. பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.04.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்த தேவையான பொருட்கள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக தயார் நிலையில் பிரித்து வைக்கப்பட்டுள்ளதையும், கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுப்பதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் ஒவ்வொரு வாக்குச் சாவடி மையத்திற்கும் வழங்கப்பட்டுள்ள வாக்காளர்களுக்கான கையுறைகள், வாக்குச்சாவடி மையத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கான முகக்கவசங்கள், சானிடைசர்கள், பாதுகாப்பு உடைகள் உள்ளிட்ட 11 வகையான பொருட்கள் தயார் நிலையில் இருப்பதையும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பார்வையிட்டார்.

மேலும் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளப்பட்டியில் அரசு மேல்நிலைப்பள்ளி, உருசு பள்ளி ஆகியவற்றில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களிலும், மருதா முஸ்லீம் அரசு நிதியுதவி பெறும் பள்ளியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களையும் பார்வையிட்டு அங்கு வாக்குபதிவை கண்காணிக்கும் வகையில் அமைக்கப்பட்ட சிசிடிவி கேமராக்கள் சரியாக பொருத்தப்பட்டுள்ளதா என்பதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக, தடாகோவில் கொங்கு ஹைடெக் பாலிடெக்னிக் கல்லூரியில் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட வாக்குசாவடிகளில் பணிபுரியும் அலுவலா்களுக்கான பயிற்சி வகுப்பினை பார்வையிட்டு அலோசனை வழங்கினார்கள். இதேபோல, கரூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்த தேவையான பொருட்கள் கரூர் நகராட்சி திருமணமண்டபத்தில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக தயார் நிலையில் பிரித்து வைக்கப்பட்டுள்ளதையும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகள் அமைந்துள்ள பகுதிகளையும் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது கரூர் சட்டமன்ற தொகுதி தோ்தல் நடத்தும் அலுவலா் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணியன், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி துணை தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாட்சியா் திரு.பன்னீர்செல்வம் உள்பட பலா் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**